සියලුම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

தென்மாகாணக் கல்வித் திணைக்களம் Department of Education, Southern Province

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education, Southern Province**

දෙවන වාර පරීක්ෂණය - 2021
இரண்டாந் தவணைப் பரீட்சை – 2021

| 11 ශ්‍රේණිය<br>தரம் 11 | දෙමළ III<br>தமிழ் மொழியும் இலக்கியமும் -III | පැය 02 යි<br>02 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க:**

- அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

---

(01) சுருக்கமான விடை தருக.

(i) கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்''
(அ) இங்கு கழாஅக்கால் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
(ஆ) குழாஅத்து என்றால் என்ன?

(ii) உச்சி வெயிலில் ஏலேலோ, உருகிறேனே ஐலசா
உள்ளம் மட்டும் ஏலேலோ, உன்னிடம் ஐலசா''
(அ) இப்பாடல் எவ்வேளையில் பாடப்பட்டது
(ஆ) உன்னிடமே என்பது எதனைக் குறிக்கின்றது.

(iii) ''கொடுமையாலளந்தாளையாரிவரென் றுரையெனக் குரிசில் கூறும். ''
(அ) யாரால் யாருக்குக் கூறப்பட்டது.
(ஆ) கொடுமையாளந்தவள் யார்?

(iv) நீர் நணிப் படிகோ டேறிச் சீர் மிகக்
கரையவர் மருளத் திரையகப் பிதிர... ''
(அ) திரையகம் என்பதன் கருத்து யாது?
(ஆ) இவ்வடிகளினூடாக எப்பருவத்தின் சிறப்பு பேசப்படுகின்றது.

(v) ''சுடுமயானத்திடை தன் றுணையேகத்
தோன்றற்றுயர் கடலினேகக் ... ''
(அ) தன்துணை என குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) ''துயர்க்கடல் ''என்பதிலுள்ள அணி யாது?

(vi) “காற்றெல்லாம் தேனிழைக்க
மலைமடியில் கண் வளர்த்தோர்”
(அ) இங்கு மலையடியில் எனக் குறிப்பிடும் மலையின் பெயர் என்ன?
(ஆ) கண் வளர்த்தோம் என்பதன் பொருள் யாது?

(vii) “ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்”
(அ) ஈமஞ்சேர் என்றால் என்ன?
(ஆ) இவ்வடிகள் இடம்பெறும் கட்டுரையின் ஆசிரியர் யார்?

(viii) “தாது ஊதி முரலும் தண்பதியும்
தாயமும் தான் தாரான் ஆகில் ...”
(அ) தண்பதி எனக் குறிப்பிடப்படும் இடம் எது?
(ஆ) தாயம் என்பதன் பொருள் என்ன?

(ix) பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவு நாள்
பகருவார் இல்லை
(அ) “பழுதிலா அவர்க்கு..” எனக் குறிப்பிடப்படும் தொழிலாளி யார்,
(ஆ) பரித்தவர் என்பதன் மூலம் கருதப்படுவது யாரு?

(x) “எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூடியதான மிதப்பு”
(அ) இங்கு எனது எனக் குறிப்பிடும் பாத்திரத்தின் பெயர் என்ன?
(ஆ) சௌந்தர்யம் என்பதன் கருத்து யாது?

(20 புள்ளிகள்)

(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே
எட்டுணையானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது
(அ) ஈத்துவக்கும் இன்பம் எவ்வாறு எடுத்துக்காட்டுப்பட்டுள்ளது.
(ஆ) அறிவுடையாரின் சிறப்பு கூறப்பட்டிருக்குமாற்றினை எடுத்துக் காட்டுக.

(ii) நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து
வீங்கக் காண்பன மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
யேங்கக் காண்பது மங்கல பேரி
யீச ராரிய நாடெங்கும் நாடே

(அ) இங்கு ஆரிய நாட்டின் வளம் பற்றி கூறப்படுவது யாது?

(ஆ) ‘‘ஏங்கக் காண்பது மங்கல பேரி’’ என்பதன் மூலம் குறிப்பிடப்படும் வியடம் யாது?

(iii) புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றம்பொல் திண்ணமதாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெத் தேர் ந்துளேன்;
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே.

(அ) நலன்கள் யாவும் எவ்வாறு அடையப்பெறும் எனக் கூறப்பட்டுள்ளது.

(ஆ) ஐம்புலன்களும் எவை?

(iv) ஆலத்தி எடுக்க நிற்பது போல் ஆவலோடு வாசலில் காத்திருந்தாள் என் மனைவி மேகலா. அவளுக்கு பக்கத்தில் என் மகன் நிறை பொங்கல் பானையை இறக்குவது போல மெத்த மெதுவாக கம்பியூட்டரை இறக்கி உள்ளே கொண்டு போய் ராகு காலம் தவிர்ந்த நல்ல வேளையில் ஒரு சேவையில் இருத்தினோம். முதல் வேலையாக சாமிக்கு தீபம் காட்டிவிட்டு வந்து கணிப்பொறியின் நெற்றியில் ஒரு குங்கமப் பொட்டு வைத்தாள் என் மனைவி.

(அ) சமய நம்பிக்கையாக கூறப்பட்டுள்ளவை எவை?

(ஆ) இங்கு உவமை அணிகளாக குறிப்பிடப்பட்டுள்ளவை எவை?

(v) ஒவ்வொரு கலைக்கும் அதற்கே உரிய சில அடிப்படைப் பண்புககள் உள்ளன. ஒரு படைப்பாளி இந்தப் பண்புகளைச் சரிவரப் பயன்படுத்தும் போது அந்தக் குறிப்பிட்ட கலை மலர்கிறது. ஓவியத்தைப் பாருங்கள் அது கோடுகளாலும், படிமங்களாலும், வண்ணங்களினாலும் ஆனது. மலர் என்ற வார்த்தையை ஒரு பலகையில் எழுதி இது ஒரு ஓவியம் என்று உங்களை நான் ஏமாற்ற முடியாது. ஓவியத்தின் தனித்துவம் பண்புகள் அங்கில்லை. அதே போல் இசை தொனியாலும், லயத்தாலும் ஆனது, நடனம் உடல் அசைவை அடிப்படையாகக் கொண்டது. சினிமாவின் சிறப்பு அம்சம், அதற்கு தனித்துவத்தை அளிக்கும் அம்சம். சினிமா மொழி எனலாம்.

(அ) ஓவியத்தின் இசையின் அடிப்படைப் பண்புகள் எவை?

(ஆ) சினிமாவின் சிறப்பம்சம் எனக் கருதப்படுவது எது?

(20 புள்ளிகள்)

(03) குகப்படலத்தல்

(அ) பரதனின் பெருமையும்.

(ஆ) இராமனைப் பிரிந்த துயரமும்

வெளிப்படுத்தப்படும் வகையினை விளக்குக.

அல்லது

கிருஷ்ணன் தூது சுருக்கத்தில்

(அ) குருநாட்டின் சிறப்புக்கள்

(ஆ) தருமனின் உயர் குணப்பண்புகள்

என்பன சித்தரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(04) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்,

(அ) நாவலர் எழுதலும் சபையில் மாற்றம் ஏற்படுதலும்

(ஆ) பண்டிதமணியின் கதை கூறும் பாங்கும் உத்திகளும் புலப்படுமாற்றினை தெளிவுபடுத்துக.

அல்லது

மூத்தம்மா சிறுகதையில்,

(அ) ஆரம்பகாலத்தில் காசிமிடத்தே காணப்பட்ட பயந்த சுபாவம்

(ஆ) பிற்காலத்தில் இளவரசனாக தன்னை எண்ணிக் கொள்ளல்

ஆகியவற்றைக் சான்றாதாரங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

- 5,6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

(05) பாரதியார் சுயசரிதையில்

(அ) ஒருவர் விரும்பும் நன்மைகளை அடைவதற்குரிய வழிவகைகளும்,

(ஆ) அவற்றை அடைய முடியாமைக்கான காரணங்களையும் எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(06) குழந்தை என எனது மனம் குதூகலிக்கும் கவிதையில்

(அ) உழவர் பற்றிய செய்திகள் யாவை?

(ஆ) கவிஞரின் மனதை குதூகலங் கொள்ள வைக்கும் நிகழ்வுகள் யாவை?

(10 புள்ளிகள்)

(07) இலட்சியமும் சமநோக்கும் கட்டுரையில்

(அ) தசரதனின்ன இலட்சிய வாழ்வு

(ஆ) தருமபுத்திரனின் சமநிலைக் கொள்கை

என்பன எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் விதத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

*********